NILET

වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
ANNUAL REPORT
2024

ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

National Institute of Language Education and Training

உள்ளடக்கம்

நிறுவன இறுதி அறிக்கை	01
நிறுவனத்தின் நோக்கம்	02
முகாமைத்துவச் சபை	03
கல்விச்சபை	04
நிறுவன தலைவரின் செய்தி	05
நிதி மற்றும் தொழில் தகவல்கள்	06
நிறுவனக் கட்டமைப்பு	08
நிறுவன முகாமைத்துவம்	11
நிறுவன ஊழியர்கள்	12
மொழி,கலாச்சாரம் மற்றும் சகவாழ்வு	13
இலத்திரனியல்மயமாக்கல்	15
2024 ஆம் ஆண்டின் இலக்குகளை அடைதல்	16
நிதியியல் செயற்பாடு	18
கடந்த பத்து ஆண்டுகளில் முக்கியமான நிதிசார் விபரங்கள்	32
கணக்காய்வு அறிக்கைகள்	33

நிறுவன இறுதி அறிக்கை

2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான பணியாதெனில், மொழிக் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குதலாகும். அத்துடன், நிறுவனத்திற்கு தனித்துவமான மூலோபாயங்கள் மூலம் அந்தப் பணியை மேலும் மேம்படுத்துகின்றது. நிறுவனம் அரசாங்க அலுவலர்களுக்கும், மொழி பயிற்சியாளர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர்களுக்கும், உரைப்பெயர்ப்பாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிக் கற்கை நிகழ்ச்சிகளை நடாத்துகின்றது.

நோக்கு

பொதுச் சமூகத்திற்கு திறம்பட சேவைகளை வழங்குவதற்காக, அரச துறை மற்றும் ஏனைய நிறுவனங்களின் பதவியணியிடயே இருமொழி மற்றும் மும்மொழித் திறன்களை மேம்படுத்துவதற்கான முன்னணி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாதல்

செயற்பணி

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மொழி கல்வி மற்றும் பயிற்சிக்கு மும்மொழி அறிவை வழங்கும் கேந்திர நிலையமாக செயற்படுதல

எமது விழுமியங்கள்

- கல்வியில் சிறந்து விளங்குதல்
- கலாசார ஒருங்கிணைப்பு
- நவீன கற்றல்
- மூலோபாய ஒத்துழைப்பு
- நெறிமுறை ஒருமைப்பாடு
- நிலையான அபிவிருத்தி
- மாணவர்களை வலுவூட்டடல்

நிறுவனத்தின் நோக்கம்

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் அத்தகைய அறிவைப் பெற விரும்புகின்றவர்களுக்கு அத்தகைய மொழிகளைக் கற்பித்தலுக்கான தகுதிவாய்ந்த ஆசிரியர்கள்;

2. எழுத்தினாலான சட்டத்தினால் தாபிக்கப்பட வேண்டிய தேசிய மொழிபெயர்ப்பாளர் சேவை மற்றும் தேசிய உரைபெயர்ப்பாளர் சேவை என்பன கொண்டிருக்க வேண்டிய தகுதிவாய்ந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் தேசிய உரைபெயர்ப்பாளர்கள்;

3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கான ஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரை பெயர்ப்பாளர்களுக்கு மொழிப்பயிற்சி வழங்குவதற்குத் தகமைவாய்ந்த பயிற்றுநர்கள்;

4. பொதுமக்களுக்கு பயனுறுதிவாய்ந்த சேவைகளை ஏற்பாடுகளுக்காக மும்மொழிகளிலும் ஆற்றல் வாய்ந்த பயிற்றப்பட்ட ஆட்கள்.

முகாமைத்துவச் சபை

(2024.01.19 **திகதி தொடக்கம்** 2024.08.15 **திகதி வரை**)

திரு.வினோத் குமார் முணசிங்க
தலைவர் - (2023.11.14 ஆம் திகதி தொடக்கம் 2024.08.13 ஆம் திகதி வரை)

திருமதி சந்திரா விக்கிரமசிங்க
தலைவர் (2024.11.12 ஆம் திகதி தொடக்கம்)

திரு. எம். எல். கம்மம்பில
மேலதிக செயலாளர் (உள்ளக நிருவாகம்)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

திருமதி டீ. ஏ. பீ. எஸ் சமன்குமாரி
மேலதிக செயலளார் - தேசிய ஒருமைப்பாட்டு பிரிவு
நீதி அமைச்சு

திரு. டீ. ஏ. பீ. அபேசேகர
பணிப்பாளர் நாயகம்,
வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்,
நிதி அமைச்சு

திருமதி சீ.எம்.பீ.ஜே.திலகரத்ன,
பணிப்பாளர்,
கல்வி அமைச்சு

திரு. முருகன் சச்சிதானந்தன்
முகாமைத்துவ சபை உறுப்பினர்

திருமதி ஹஸ்னா சேகு
முகாமைத்துவ சபை உறுப்பினர்

திரு.ஜயந்த ஜயமான்ன
முகாமைத்துவ சபை உறுப்பினர்

திரு. சீலரத்ன செனரத்
முகாமைத்துவ சபை உறுப்பினர்

திரு. ஸமிந்த மஹலேகம்
பணிப்பாளர் நாயகம் (பதில்) சபையின் செயலாளர்
2023.11.06 தொடக்கம்

கல்விச் சபை

திரு.வினோத் குமார் முணசிங்க
தலைவர் - (2023.11.14 ஆம் திகதி தொடக்கம் 2024.08.13 ஆம் திகதி வரை)

திருமதி சந்திரா விக்கிரமசிங்க
தலைவர் (2024.11.12 ஆம் திகதி தொடக்கம்)

கலாநிதி திரு. சந்தகொமி கோபரஹேவா
பிரிவு தலைவர், - சிங்கள மொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

கலாநிதி குசுமலதா லங்காமுல்ல
பிரிவு தலைவர், - சிங்கள மொழி மற்றும் வெகுசன தொடர்பாடல் பிரிவு, மானிடவியல் மற்றம் சமூகவியல் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

கலாநிதி திரு. கே.ஓ.டீ.எஸ்.கருணாநாயக்க
பிரிவு தலைவர், - அங்கில மொழி, கலை பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

கலாநிதி திருமதி. எம்.ஏ.எஸ்.சாதியா
பிரிவு தலைவர் - மொழி பிரிவு, கலை மற்றும் கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

கலாநிதி எஸ்.பிரசாந்தன்
பிரிவு தலைவர், - அங்கிலம் மற்றும் மொழிப் பிரிவு, மானிடவியல் மற்றும் சமூகவியல் பீடம், ருகுணு பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

கலாநிதி திரு பி.என்.ரத்நாயக்க
அவர்முதன்மை - ஆங்கிலம் மற்றும் மொழியியல் பிரிவு மனித மற்றும் சமூக அறிவியல் ருகுணு பல்கலைக்கழகம்
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

திரு.பீ.சேனாதீர
ஆணையாளர் நாயகம், அரசகரும மொழிகள் திணைக்களம்,
(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)

நிறுவன தலைவரின் செய்தி

சந்திரா விக்கிரமசிங்க
தலைவர்
தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

மொழிப் பயிற்சி கல்வி தொடர்பில் ஒரு முன்னணி தேசிய நிறுவனமாக மாறுவதை தொலைநோக்காக கொண்டுள்ள இந்த நிறுவனம், தற்போது வரையறுக்கப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களை திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கை அரசின் அரசகரும மொழிக் கொள்கை மற்றும் நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்பதில் சிறந்த பங்களிப்பை வழங்குகின்றது.

வெறுமனே, சுற்றுநிருபங்களுக்கு மட்டும் ஒழுங்கமைந்து மொழிப் பயிற்சிகளை மட்டுப்படுத்தாமல், மொழிகளைப் பயன்படுத்தும் சமூகங்களின் கலாசார மற்றும் மானிடப் பண்புகளைப் உணர்ந்து, இனங்களுக்கிடையேயான கலாசாரப் புரிந்துணர்வுக்கும்; உண்மையான சகவாழ்வு உளப்பாங்குகளைச் சமூகமயமாக்குவதற்கும் நாம் தொடர்ச்சியான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

ஒரு பொறுப்பான நிறுவனம் என்ற வகையில், எங்கள் செயற்பாட்டு இலக்குகளை அடைந்து, எங்கள் பயிற்சித் திட்டங்களின் தரத்தைப் பேணிக்கொண்டு செயலாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதன்படி, எமது நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் இந்த தேசிய பணியை மேலும் வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் மாகாண சபைக்குட்பட்ட பயிற்சி நிலையங்களைப் பயன்படுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

நிதி மற்றும் தொழில் தகவல்கள்

மொத்த வருமானம்

2024 ஆம் ஆண்டில் ரூபா.மில்லியன் 285.181 ஆன வருமானத்தை நிறுவனம் ஈட்டியுள்ளது.



மொத்த செலவினம்

2024 ஆம் ஆண்டில் ரூபா.மில்லியன் 172.228 ஆன செலவினம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



சொத்துக்கள் அதிகரித்தல்

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா.மில்லியன் 156,653 ஆல் அதிகரித்துள்ளது.



வருமானம்		இலாபம்	
2023	2024	2023	2024
ரூபா. 246,226,587	ரூபா. 285,181,293	ரூபா. 92,498,165	ரூபா. 112,952,401
அதிகரித்தல்	16%	அதிகரித்தல்	22%

அரசாங்க அலுவலர்கள் பொருட்டு நடாத்தப்படும் இரண்டாவது மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



ஏனைய பயிற்சி கற்கைநெறிகள்



கற்கைநெறிகளின் எண்ணிக்கை		கற்கைநெறி பெறுநர்களின் எண்ணிக்கை	
2023	2024	2023	2024
627	665	35,233	32,105
அதிகரித்தல் +	6%	கழித்தல் -	-9%

நிறுவனக் கட்டமைப்பு

தலைமை அலுவலகம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் 321/1 ஹய்லெவல் வீதி, மாகும்புர, பன்னிப்பிட்டிய எனும் இடத்தில் இயங்குகின்றது. மொழிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல் மற்றும் அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களுடன் வினைத்திறனான தொடர்புகளை உருவாக்குதல் தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோன்று பல்வேறு பயிற்சி பாடநெறிகளுக்கான வசதிகளை வழங்குதலும், தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.



அகலவத்தை பயிற்சி நிலையம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நிலையம் களுத்துறை மாவட்டத்தில், அகலவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த காணி அமைந்துள்ள சூழமைவு நிறுவனத்தின் அபிவிருத்திக்கு மிகவும் சாதகமான காரணியாக உள்ளது. மொழிக் கற்பித்தல் செயன்முறையை மிகவும் அழகியல் பாங்குடன், பிரயோக மற்றும் அறிவுசார் முறையில் மேற்கொள்ளக்கூடிய வனப்பான சூழல் மற்றும் மனங்கவர் தோற்றத்துடனான வதிவிட வசதிகளுடன் அகலவத்தை மொழி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் வதிவிட பயிற்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்துவதுடன் ஒரே முறையில் 60 பேர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ளன. இந்த நிலையமானது, போதனா மண்டபம், நூலகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது.

• நிர்வாக மற்றும் வழங்கல் பிரிவு

நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து நிர்வாக மற்றும் தாபனப் செயற்பாடுகள் இப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை சிறப்பாக தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி பிரிவுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதுடன், பல்வேறு பிரிவுகளின் கருமங்களை வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஊழியர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
பயிற்சிகளுக்கு தேவையான பயிற்சி கருவிகள் மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான கணினிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள் இந்த பிரிவனால் கொள்வனவு செய்யப்படுகிறது. வாகனங்களின் பராமரிப்பு, போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு சேவை மற்றும் தூய்மையாக்கல் சேவைகளும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவையும் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

• திட்டமிடல் பிரிவு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கு நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான திட்டங்களை தயாரித்தல் இந்த பிரிவின் முதன்மைப் பொறுப்பாகும்.
பயிற்சித் தேவைகளை அடையாளம் காணுதல், ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்தல், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மாதாந்த திட்டங்களைத் தயாரித்தல், மாதாந்த காலாண்டு மற்றும் வடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரித்து உரிய பிரிவுகளுக்கு அனுப்பி வைத்தல் இந்தப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

• கணக்குப் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து கணக்கு மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்படுதல் கணக்குப் பிரிவின் கடமைப் பொறுப்பாகும். பிரதான நிதிசார் நிறைவேற்று அதிகாரி பணிப்பாளர் நாயகமாவதுடன், கணக்காளர் நிதி அலுவல்கள் தொடர்பில் பொறுப்பு கூறுதல் வேண்டும்.

• உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு சுயாதீனமாக செயற்படுகிறது. அதன் மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டப்படுகிறது. நிறுவனத்தின் தரவுப் பகுப்பாய்வு மற்றும் செயன்முறையின் அடிப்படையிலான அவதானிப்பு மற்றும் விதந்துரைகளை வழங்குவதன் மூலம், நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைக்கு உதவும் இடர் முகாமைத்துவம், நிர்வாகம், மேம்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறன் ஊடாக தமது குறிக்கோளை அடைவதற்காக நிறுவனத்தில் முறையான மற்றும் ஒழுங்கான முறைமை பின்பற்றப்படுகிறது.

• பயிற்சிப் பிரிவு

பயிற்சிப் பிரிவின் அடிப்படை கடமைப்பொறுப்பு யாதெனில், பொது நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2023 இன் படி, அரச மற்றும் பகுதிநேர அரச அலுவலர்களுக்காக மூன்று பிரிவுகளின் கீழ் இரண்டாம் மொழி பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்கின்றது. அதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

1. பதவிநிலை தரத்தின் அலுவலர்களுக்காக 200 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி (சிங்களம் தமிழ்) பயிற்சி பாடநெறி நடாத்துதல்.

2. இடைநிலை தரத்தின் அரச அலுவலர்களுக்காக 150 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பயிற்சி பாடநெறி நடாத்துதல்.

3. ஆரம்ப தரத்தின் அரச அலுவலர்களுக்காக 100 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பயிற்சி பாடநெறி நடாத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பயிற்சி பாடநெறிகளையும் ஏற்பாடு செய்தல் மற்றும் தொடர்சியாக பாடநெறிகளை நடத்துவதற்கான மூலோபாயங்களையும் பயன்படுத்தி பயிற்சி பாடநெறிகள் தொடர்பான முறையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்தலை மேற்கொள்வதும் பயிற்சிப் பிரிவின் கடமைப்பொறுப்புக்கு உரியதாகும். அத்துடன் வளவாளர் குழாம் இற்றைப்படுத்தி, பேணப்பட்டு குறித்த வளவாளர்களை பயிற்சிப் பாடநெறிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தலும் பயிற்சிப் பிரிவின் முக்கியமான கடமைப் பொறுப்பாகும்.
அத்துடன் நிறுவனத்தின் நோக்கத்தை மிகவும் வினைத்திறனான முறையில் அடைவதற்கு பின்வரும் கருமங்களும் பயிற்சிப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளன.

1. அரச அலுவலர்களுக்கான பகுதிநேர பாடநெறிகளை நடாத்துதல்.
2. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.

3. தொடராய்வு மற்றும் ஒழுங்குறுத்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

4. அனைத்து முழுநேர பாடநெறிகள் தொடர்பில் முறையான மதிப்பீடுகளை நடாத்துதல்.

அதற்கு மேலதிகமாக நிறுவனத்தினால் நடாத்தப்படும்; டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.
அதன் கீழ்,

1. இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் தமிழ் டிப்ளோமா பாடநெறி

2. இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறி

3. மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு பாடநெறி

4. பல்வேறு தொழில்வாண்மையாளர்களுக்கான இரண்டாம் மொழிப் பாடநெறி

5. ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி

6. சர்வதேச மொழி பாடநெறி

7. சைகை மொழி சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறி

8. பிரைல் மொழி பாடநெறி

மேற்குறித்த பாடநெறிகள் தொடர்பாக அனைத்து செயற்பாடுகளும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. சமகால தேவைகளுக்கு பொருத்தமான வகையில் பயிற்சிப் பாடநெறிகளை இற்றைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதிலும் பயிற்சிப் பிரிவு தொடர்ச்சியாக கவனம் செலுத்துகிறது.
அதற்கமைய, இலங்கை சமூகத்தில் பல்வேறு மொழிகளை பேசுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் மொழிப் பன்மைத்துவம் உள்ள இனங்கள் மத்தியில் சமாதானம் மற்றும் சகவாழ்வினை விருத்தி செய்யும் வகையில் சம்பிரதாயமான இரண்டாம் மொழிப் கற்பித்தல் பாடநெறி போக்கிலிருந்து விலகி, இதயங்களுக்கிடையிலான உணர்வுளை பிண்ணிப் பிணையும் வகையில் பிரயோக ரீதியிலான பயிற்சி பாடநெறி ஒன்றினை பெற்றுக்கொடுக்க பயிற்சிப் பிரிவு தொடர்ந்து செயற்படுகின்றது.

நிறுவன முகாமைத்துவம்

• முகாமைத்துவ சபை

நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான அனைத்து தீர்மானங்களும் கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபையால் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க சட்டத்தின் 3 (I) பிரிவுக்கு அமைய கௌரவ அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஏழு முகாமைத்துவ சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

• கல்விச் சபை

நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் துறைசார்ந்த ஏனைய செயற்பாடுகளை திறமையான முறையில் நிறைவேற்றுவதற்கும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கல்விச் / சபையின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி பல்வேறு பல்கலைக்கழகங்களில் மொழி மற்றும் கல்விப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும், பல்கலைக்கழகங்களில் கற்கைச் செயற்பாடுகளை வழிநடாத்தும் ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களைக் கொண்டமைந்துள்ள கல்விச் சபை, நிறுவனத்தின் மொழிக் கல்வி மற்றும் பயிற்சி II தொடர்பில் கொள்கை முறையிலான

தீர்மனாங்களை எடுப்பதற்கு நேரடியாக பங்களிப்பு வழங்குகின்றனர். சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கல்விச் சபையால், நிறுவனத்தின் கல்வி செயற்பாடுகள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்பதுடன், கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்தவச் சபைக்கு பரிந்துரைகள் வழங்குதல் வேண்டும்.

• நிறுவனத்தின் முகாமைத்துவம்

பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார். முகாமைத்தவ சபையின் ஏற்பாடுகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம் பின்வரும் கடமைகளை நிறைவேற்றுகின்றார். நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு, நிறுவனத்தின் அனைத்து ஆளணியினரையும் நியமித்தல், நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து பயிற்சிகளையும் ஒருங்கிணைப்பு செய்தல், நிர்வாகம் மற்றும் நிறுவன செயற்பாடுகளின் மேற்பார்வை போன்ற கடமைகளைப் பணிப்பாளர் நாயகம் மேற்கொள்கின்றார்.

நிறுவனத்தின் பதவியணி

நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 41 ஆவதுடன், 2024 ஆம் ஆண்டு முடிவில் 37 பேர்களைக் கொண்ட பதவியணி சேவையில் ஈடுபட்டது. பதவியணியின் ஆற்றல் விருத்திக்காக நிறுவனத்தால் செயலமர்வுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

ஆண் அலுவலர்கள்



பெண் அலுவலர்கள்



பதவியணி அமைப்பு



நிலை	அனுமதிக்கப்பட்ட ஊழியர் தொகை	சேவை செய்யும் ஊழியர் தொகை
சிரேஷ்ட	12	10
மூன்றாம் நிலை	2	2
இரண்டாம்நிலை	17	14
முதனிலை	10	11
முதனிலை	41	37

மொழி, கலாசாரம் மற்றும் சகவாழ்வு

பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 1/2023 இன் படி, அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்களம் / தமிழ் இரண்டாம் மொழிப் புலமையைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும், பொது மக்களுக்கு இரண்டாம் மொழித் திறனை வழங்குவதற்காகவும் எமது நிறுவனம் மொழிப் பயிற்சி பாடநெறிகளை நடாத்துகின்றது.

எமது பயிற்சி பாடநெறிகள், வெறுமனே மொழி கற்பித்தலுடன் நின்றுவிடாமல், அந்த மொழியைப் பேசும் மக்களுக்குரித்தான உணர்வுபூர்வமான கலாசார காரணிகள் தொடர்பாகவும், கவனத்தில் கொண்டு மொழி மற்றும் கலாச்சார புரிதல் ஆகிய இரண்டு விடயங்களிலும் கவனம் செலுத்தி எமது பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இரண்டாம் மொழிப் பயிற்சி நெறிகளின் பாடத்திட்டத்தில் கள ஆய்வை உள்ளடக்குவதன் மூலம், பயிற்சி பெறுபவர்கள் தாங்கள் கற்கும் மொழியைப் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குச் சென்று, அந்த மொழி ஊடகத்தில் கலந்துரையாடி, அவர்களின் மதச் சடங்குகள், உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியக் கட்டமைப்புக்கள் பற்றிய சரியான நடைமுறைப் புரிதலைப் பெற்றுக்கொள்ள இடமளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பாடநெறிகளின் முடிவில் நடாத்தப்படும் கலாசார நிகழ்வுகளின் மூலமும் இந்தக் கலாசாரப் பரிமாற்றம் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்போது முழுமையான நிகழ்ச்சித்திட்டமும் கற்றுக்கொண்ட மொழி ஊடகத்தில் நடாத்தப்படுதலும், உரிய கலாசாரத்தைத் தழுவி, அந்த ஆடை அணிகலன்கள், பழக்கவழக்கங்கள், அலங்காரங்களுக்கு உட்பட்டு, கலாசாரத்துடன் பிணைந்த கலை அம்சங்களை வெளிப்படுத்தலும், பேச்சுத்திறனை மேம்படுத்தும் கலை அம்சங்களை முன்வைப்பதற்கும் பயிற்சி பெறுபவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

மேலும், அவ்வப்போது மருத்துவர்களின் பாடநெறிகளுக்கு இடையில் நடாத்தப்படும் கள முகாம்கள் மூலமும், தான் கற்றுக்கொண்ட மொழியறிவை நடைமுறையில், களத்தில் பயன்படுத்துவது தொடர்பான நடைமுறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதன் மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட மொழித் திறனும், பெற்றுக்கொண்ட கலாசாரப் புரிதலும் ஊடாக, சகோதர சமூகத்திற்கு உணர்வுபூர்வமான சமூக ரீதியாக வினைத்திறனான அரச சேவையை வழங்குவதற்கும், சமூகத்திற்குள் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான நேர்மறையான மனப்பான்மையை வளர்ப்பதற்கும் தேவையான வலுவான அடித்தளத்தை எமது பாடத்திட்டம் வழங்கும் என நாம் நம்புகின்றோம்.

OPPO F19

இலத்திரனியல்மயமாக்கல்

இணையத்தளம் உருவாக்குதல்

நிறுவனத்தின் இணையத்தளம் செயல்படவில்லை என்பதுடன், 2024 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாட்டுக்கு அமைவாக புதிய இணையத்தளம் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனூடாக நவீன தொழில்நுட்பத்திற்கு அமைவாகவும், போட்டித் தன்மைக்கு பொருத்தமான வகையிலும் உயர் தரத்திலான இணையத்தளம் பராமரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், தேவையான தரப்புகளிடத்தில் நிறுவனத்தின் தகவல்கள் மிக வசதியாகவும் துரிதமாகவும் பெற்றுக்கொள்வதற்கு அதன்மூலம் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

சான்றிதழ் ஒப்பாய்வு கட்டமைவு தாபித்தல்

18/2020 சுற்றறிக்கை பிரகாரம் அரச அலுவலர்களுக்கான இரண்டாவது மொழி (சிங்களம்/தமிழ்) மொழி பயிற்சி கற்கைநெறி அடங்கலாக ஏனைய மொழி பயிற்சி கற்கைநெறிகள் நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகின்றது. ஆண்டுக்கு 30,000 இற்கு அதிகமான சான்றிதழ்கள் நிறுவனத்தால் வழங்கப்படுவதுடன், குறித்த சான்றிதழ்களை ஒப்பாய்வு செய்வதற்கு நிறுவனத்திடம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. குறித்த செயற்பாட்டினை மிகவும் வினைத்திறனுடன் செயற்படுத்தவதற்காக இந்தக் கட்டமைப்பு நிறுவனத்தால் அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதன்மூலம் இணையத்தளம் ஊடாக சான்றிதழ்களை ஒப்பாய்வு செய்துக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக கற்கைநெறி பயிலுநர்களினதும் நிறுவனத்தின் பதவியணியினதும் காலம், உழைப்பு மற்றும் பணம் சேமித்துக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இலக்குகளை அடைதல்

• அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2023 இன் படி நடாத்தப்படும் இரண்டாவது மொழி சிங்களம்/தமிழ் பயிற்சி கற்கைநெறிகள்.

ஏறத்தாழ அரசாங்க அலுவலர்கள் 29,212 பேர்கள் பொருட்டு 649 சிங்களம்/தமிழ் மொழி பயிற்சி கற்கைநெறிகள் நடாத்தப்படுவதுடன் ஊடாக இரண்டாவது மொழி தேர்ச்சி வழங்குதல்.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித் திட்டம்	இலக்கு			முன்னேற்றம்		
		நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	கற்கைநெறி பயிலுநர்களின் எண்ணிக்கை	வருமானம் (ரூ.மி)	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	கற்கைநெறி பயிலுநர்களின் எண்ணிக்கை	வருமானம் (ரூ.மி)
01	100 மணித்தியாலங்கள் சிங்களம்-தமிழ் மொழி பயிற்சி கற்கைநெறி	52	1,797	8.23	80	2,936	13.895
02	150 மணித்தியாலங்கள் சிங்களம்-தமிழ் மொழி பயிற்சி கற்கைநெறி	316	15,147	127.90	474	22,520	194.110
03	200 மணித்தியாலங்கள் சிங்களம்-தமிழ் மொழி பயிற்சி கற்கைநெறி	78	3,205	46.68	95	3,756	53.070
	மொத்தம்	**446**	**20,149**	**182.81**	**649**	**29,212**	**261.075**

ழுழு 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நடைமுறைப்படுத்திய மற்றும் நடைமுறைப்படுகின்ற அனைத்து கற்கைநெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

• மற்றைய பயிற்சி பாடநெறிகள்

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித் திட்டம்	இலக்கு			முன்னேற்றம் (முடிவுறுத்தப்பட்ட மற்றும் நடைமுறைப்படுகின்ற)		
		நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	கற்கைநெறி பயிலுநர்களின் எண்ணிக்கை	வருமானம் (ரூ.மி)	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	கற்கைநெறி பயிலுநர்களின் எண்ணிக்கை	வருமானம் (ரூ.மி)
01	50 மணித்தியாலங்கள் - அடிப்படை ஆசிரியர் பயிற்சி கற்கைநெறி	02	80	1.60	01	29	0.58
02	சிங்கள மொழி டிப்ளோமா கற்கைநெறி	01	35	1.69	01	48	1.69
03	தமிழ் மொழி டிப்ளோமா கற்கைநெறி	01	45	1.51	01	31	0.61
04	ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி	01	49	0.73	01	49	0.74
05	ஜப்பான் மொழி சான்றிதழ் கற்கைநெறி	01	15	0.21	01	15	0.22

06	கொரிய மொழி சான்றிதழ் பாடநெறி	01	15	0.21	01	12	0.21
07	மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி	03	75	1.81	02	52	.61
08	சைகை மொழி டிப்ளோமா பாடநெறி	01	30	1.45	01	20	.97
09	வளவாளர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	100	-	02	91	-
10	தொடராய்வு மற்றும் ஒழுங்குறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்	05	370	-	04	270	-
11	இளைஞர் யுவதிகளுக்கான மொழி தொடர்பான முகாம்கள்	01	200	-	01	200	-
	மொத்தம்	**19**	**1,014**	**9.21**	**16**	**817**	**5.63**

• செயல்படுத்தப்பட்ட செயல்திட்டங்கள்

1. சான்றிதழ்களை உறுதிப்படுத்துவதற்காக இணையதள (Web Directory) உருவாக்குதல்.

2. ருகுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடுதல்.

3. ஆங்கில மொழி பயிற்சி கற்கைநெறிக்கு ஏற்புடையதாக பாடவிதானங்களை தயாரித்தல்.

4. மருத்துவ அலுவலர்களின் பயிற்சி பாடநெறிகளுக்கு ஏற்புடையதாக பாடநெறி பாடத்திட்டங்களை தயாரித்தல்.

5. செய்முறை சிங்களம்ஃதமிழ் பயிற்சி பாடநெறிகளுக்கு ஏற்புடையதான பாடத்திட்டங்களை தயாரித்தல்..

6. முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி சாரதிகளுக்கான பயிற்சி பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு ஏற்புடையதாக அடிப்படை பணிகளை மேற்கொள்ளுதல்.

7. அரச மொழி தினம் பொருட்டு “இரு மொழி நட்சத்திரங்கள்” கூட்டு பாடல் போட்டி நடாத்தல்.

விபரம்	பெறுமதி (ரூபா)	மொத்த பெறுமதி (ரூபா)
வருமானம்		
பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பெற்றுக்கொண்ட வருமானம்	260,029,265	
முதலீட்டு வருமானம் (வட்டி)	20,649,028	
ஏனைய வருமானம்	4,503,000	
மொத்த வருமானம்		**285,181,293**
செலவினம்		
நிருவாக செலவினம்	76,515,869	
பயிற்சி திட்டங்களுக்கான செலவினம்	95,157,152	
நிதிசார் செலவினம்	555,871	
மொத்த செலவினம்		**(172,228,892)**
இலாபம் - நட்டம்		**112,952,401**

நிதியியல் செயற்பாடு

கணக்கீட்டுக் கோட்பாடுகள்.

1.1 நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

நிறுவனத்தின் நிதி சார் அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தர நிர்ணயத்தின். அடிப்படையிலையே உருவாக்கப்பட்டுள்ளன. வெற்றிக்கான குறிப்புக்களில் பொருத்தமானதும் திட்டவட்டதுமான கொள்கைகளின் பயன்பாடு பற்றி விளக்கப்பட்டிருக்கும் அதேவேளை நிதி அறிக்கைகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எந்தவித சரிசெய்தலும் இதில் மேற்கொள்ளப்படவில்லை.

1.2 ஒப்பீட்டுத் தகவல்

நிகழ்கால நிதி அறிக்கைகள் தொடர்பான புரிதலை அதிகரிப்பதற்காக கடந்த காலம் தழுவிய அவசியமான ஒப்பீட்டு மாதிரிகள் வெளியிடப்படுகின்றன.
நிதி அறிக்கைகளில் உள்ள உருப்படிகளின் விளக்கக் கூற்று மற்றும் வகைப்படுத்தல் போன்றவை திருத்தியமைக்கப்படும் போது சிறந்த விளக்கக் கூ/ற்றொன்றினை வழங்குவதற்காக ஒப்பீட்டுத் தொகைகளும் நடப்பு ஆண்டை ஒத்த விதமாக வகைப் படுத்தப்படுகின்றன

1.3 உடமைகள், தாவரங்கள் மற்றும் உபகரணங்கள்

உடமைகள், தாவரங்கள் மற்றும் உபகரணங்களின் விலைகள் பெறுமானத் தேய்வை அப்புறப்படுத்தியதன் பின்னரே குறித்துக்காட்டப்பட்டுள்ளன. சுதந்திமான நிலம் தவிர சொத்துக்கள், பொருட்கள், உபகரணங்களினதும் தேய்மானத்துக்கான ஒதுக்கீட்டைக் கணிப்பதன் மூலம் பெறுமதி கணிக்கப்படுகின்றது. நிலம் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள், உபகரணங்கள் போன்றவற்றை அவற்றின் ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமதி மதிப்பீடு ஒன்றை கீழே காட்டப்பட்டுள்ளவாறு இலகுவான அடிப்படையில் மேற்கொள்ரெதல் வேண்டும்.

1.3.1 பெறுமானத் தேய்வு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு கணக்கீடு கொள்வனவு செய்த திகதி / ஒதுக்கல் திகதி என்ற இலகுவான முறையில் கணக்கிடப்படுகிறது.

சொத்து, தாவரங்கள், உபகரணம்

விவரணம்	சத வீதம்
கட்டடம் மற்றும் அமைப்பு	2.5
தளபாட மற்றும் அலுவலக உபகரணம்	10
நூலக நூல்கள்	10
தாவர மற்றும் இயந்திர உபகரணங்கள்	20
வாகனங்கள்	25
கணினிகள்	25
இணையத்தளம் மற்றும் மென்பொருள்	25

1.4 பணிக்கொடை ஒதுக்கீடு

இத் தொகையானது, கணக்காண்டின்; இறுதி மாத சம்பளத்தின் அரைவாசி தொகைக்கு சமமாக வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியான ஒரு வருட சேவையின் முடிவில் ஒவ்வொரு அலுவலருக்கும் இது வழங்கப்படுவதுடன் சேவையின் முதல் வருடத்தில் இருந்தே இது ஆரம்பிக்கப்படும்.
எவ்வாறெனினும், 1983ம் ஆண்டின் 12ம் இலக்க உபகாரத் தொகை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், ஒரு அலுவலர் 5 வருட தொடர்ச்சியான சேவையின் பின்னரே இக்கொடுப்பனவுக்குத் தகுதி பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது.

1.5 கிடைக்கப்பெற வேண்டிய வரவுகள்

வர்த்தக வரவுகளானது, எதிர்பார்க்கப்படும் உணரக்கூடிய பெறுமதிகளைச் சேர்ந்தே உள்ளது. வருட இறுதியில் அனைத்து நிலுவைத் தொகைகளையும் மதிப்பாய்வு செய்து சந்தேகத்துக்குரிய வரவுகள் தொடர்பாக ஒரு கணிப்பீடு செய்யப்படும். அறவிடமுடியா கடன்களை கண்டறியப்பட்ட ஆண்டிலேயே எழுதப்படும்.

1.6 பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை

பணப் புழக்க அறிக்கைக்கேற்ப, பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை என்பது கையிலுள்ள பணத்தையும், வங்கிகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும் வைப்புக்கள், வங்கி மேலதிக பற்றுக்களின் நிகர பெறுமதி என்பவற்றை உள்ளடக்கும். இருப்பு நிலைக்குறிப்பில் வங்கி மேலதிக பற்றுக்கள், கடன் பெறுகைகளின் மீது நடைமுறைப் பொறுப்புகளாக உள்ளக்கப்படும்.

1.7 இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

வணிக அறிக்கையில், இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் பின்னரான அனைத்து எழுத்து மூல நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுவதோடு அவசியப்படும் இடங்களில் சரி செய்தல்கள், வெளிப்படுத்தல்கள் போன்றவையும் மேற்கொள்ளப்படும்.

1.8 ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகளும்

இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் மதிப்பிட முடியுமான அனைத்துத் பொறுப்புக்களும் வணிக அறிக்கையில் உள்ளடக்கப்படும். அறிக்கையில் காணப்படும் ஆனால் சரியாக இனங்காண முடியாத பொறுப்புக்கள் தொடர்பில் போதிய ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

1.9 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஏற்பாடுகள்

மேற்குறிப்பிடப்பட்ட இரு வகை நிதிப்பங்களிப்புக்களுக்கும், ஊழியர்கள் தகுதி பெறுவர். நிறுவனங்கள் விஷேட கொடுப்பனவு தவிர்ந்த மொத்த சம்பளத்தில் முறையே 12% மற்றும் 3% ஐ ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்காக பங்களிப்பு செய்யும்.

1.10 வருமானம்

மீண்டெழும் செலவாக அரச திறைசேரியால் கிடைக்கப்பெறும் மாணியங்கள் வருமானமாக கருதி நிதி அறிக்கைகளில் உள் வாங்கப்படுவதுடன் நிறுவனத்தின் சகல வருமான நிதி வெளியீட்டு அறிக்கைகளிலும் வைத்துக் காட்டப்படும்.

1.10.1 சொத்து மற்றும் பெறுகைகள்

பொதுக திறைசேரி மூலம் நிறுவனத்துக்கு கிடைக்கப்பெறும் மீண்டு வரும் செலவுக்கான மானியங்கள் வருமானமாக கணிக்கப்பட்டு நிதி அறிக்கைகனில் உள்வாங்கப்படும்.அனைத்தும் வருமானங்களும் நிறுவனத்தின் மீண்டெழும் வருமானமாக காட்டப்படும்.

1.10.2 மூலதனச் செலவுக்கான பெறுகைகள்

பொது திறைசேரி மூலம் நிறுவனத்தின் மூலதனச் செலவுக்காக கிடைக்கப் பெறும் மானியங்கள் இதில் உள்ளடக்கப்படும்.பெறுகையின் அடிப்படையில் செலவு இருந்து மேற்கொள்ளப்;படும்.

1.11 பயிற்சி வருமானம்

பயிற்றுவிப்புத் திட்டங்கள் மூலம் கிடைக்கப்பெறும் அனைத்து வருமானங்களும் பயிற்றுவிப்புத் திட்ட வருமானங்களாக அங்கீகரிக்கப்படும். அத்தோடு நிறுவனம் மூலம் உருவாக்கப்படும் அனைத்து வருமானங்களும் வருமான அறிக்கையில் 'வேறு வருமானங்கள்' என்ற பிரிவின் கீழ் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.12 இருப்புப் பொருட்கள்

பாடப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்ற இருப்புப் பொருட்கள் செலவுகளின் பெறுமதிகள் நிதி அறிக்கைகளில் குறித்துக்காட்டப் படும்.

கணக்கீட்டுக் கோட்பாட்டின் மாற்றம்

2.1 தேய்மானக் கொள்கை

தேய்மான முறையானது கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தின்,அவ் வருடத்தின் முழுப் பெறுமானத் தேய்வு முறையில் இருந்து மாற்றப்படுவதோடு அப்புறப்படுத்தியுள்ளது. வருடத்தில் தேய்மானமானது, தேதி அடிப்படையிலான தேய்மானமாகவும் 2014ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களின் ஒதுக்குதல் மூலம் கணிக்கப்படுகிறது.

காசுப் பாய்ச்சல் கூற்று

பணப் புழக்க அறிக்கையானது மறைமுக முறையைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்து. பணம் மற்றும் இருப்புத் தொகையானது, நிறுவனத்தின் வங்கி மற்றும் பண நிலுவையை உள்ளடக்கும்.

டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

நிதி திலை சார் கூற்று

விபரம்	குறிப்புக்கள்	2024.12.31 ரூபா	2023.12.31 ரூபா
சொத்துக்கள்			
அசையா சொத்துக்கள்			
உடமைகள், பொருட்கள், உபகரணங்களை	06	58,446,154	50,649,490
அசையும் சொத்துக்கள்			
வர்த்தகம் மற்றும் வேறு பெறுகைகள்	07	53,201,617	33,308,669
இருப்பு - கற்றல் உபகரணம் மற்றும் நுகர்வுப் பொருட்கள்		2,344,813	1,334,029
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	08	363,042,652	235,089,571
மொத்த சொத்துக்கள்		**477,035,236**	**320,381,759**
தேறிய சொத்துக்கள் / கொள்ளைவுகள்			
மூலதனம்		13,015,468	13,015,468
திரட்டப்பட்ட மிகை / (பற்றாக்குறை)		300,658,091	187,705,689
மதிப்பீட்டு இருப்பு		89,062,528	74,188,699
		402,736,087	**274,909,856**
அசையா பொறுப்புக்கள்	09		
உபகாரக் கொடுப்பனவு		7,537,035	7,227,180
நிலையான சொத்துக்களுக்கான அரச மானியம்		-	-
		7,537,035	**7,227,180**
நடைமுறை பொறுப்புக்கள்			
கடன் பெறுகை மற்றும் செலுத்த வேண்டியவை	10	64,256,133	36,940,137
திரட்டப்பட்ட செலவுகள்	11	2,505,981	1,304,586
		66,762,115	38,244,723
மொத்த நிதிகளும் பொறுப்புக்களும்		**477,035,236**	**320,381,759**

நிதி அறிக்கைகளை உறுதிப்படுத்தலும் அனுமதித்தலும

கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புக்களும் இந்தநிதி அறிக்கையின் முக்கியமான பாகங்களாகும். இந்தநிதி நிலை அறிக்கையானது 2022.12.31 வரையான நிறுவன விவகாரங்கள் தொடர்பான உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தை வழங்கும் என்பதை உறுதி செய்கிறோம். அதே போன்று ஒவ்வொரு வருட முடிவிலும் அந்த வருடத்திற்கான மேலதிக பற்று ,தேய்வு தொட்பாக காட்டப்பட்டிருக்கும்.நிதி நிலை அறிக்கையானது அரசின் சட்டம் மற்றும் விதி முறைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்) அனோமா ரூபசிங்க
கணக்காளர்

ஷமிந்த மஹலேக்கம்
பணிப்பாளர் நாயகம்(பதில்)

01 -03 வரையான பக்கங்கள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 8-13 வரையான பக்கங்களில் உள்ள குறிப்புக்கள் இந்தநிதி அறிக்கையி;ன் முக்கிய பாகமாக காணப்படுகிறது. நிதி அறிக்கையானது முகாமைத்துவ குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

முகாமைத்துவ குழு உறுப்பினர்;
தலைவர்

31.12.2024 ஆம் திகதி நிறைவு பெற்ற
காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

விபரம்	குறிப்பு	2024 ரூபா	2023 ரூபா
வருமானம்			
திறைசேரி பெறுகைகள்	01	-	50,203,000
பயிற்சித் திட்ட வருமானம்		260,029,265	173,838,925
வேறு வருமானம்	02	25,152,028	22,184,662
மொத்த வருமானம்		**285,181,293**	**246,226,587**
செலவுகள்			
நிர்வாக செலவுகள்	03	(76,515,869)	(82,310,560)
பயிற்சித் திட்ட செலவுகள்	04	(95,157,152)	(70,017,663)
செயல்பாடுகளின் போதான இலாபம் / (இழப்பு)		113,508,272	93,898,364
நிதிச் செலவுகள	05	(555,871)	(1,400,199)
வரி விதிப்புக்கு முன்னரான இலாபம் / (இழப்பு)		112,952,401	92,498,165
வரி		-	-
வருடத்தின் இலாபம் / (இழப்பு)		**112,952,401**	**92,498,165**

31.12.2024 இல் நிறைவு பெற்ற
வருடத்திற்கான தேறிய சொத்துக்கள் உரிமங்கள் மாற்றங்கள் சார் கூற்று

விபரம்	பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா	திரட்டப்பட்ட இலாபம் / (நட்டம்) ரூபா	மதிப்பீட்டு இருப்பு ரூபா	மொத்தம ரூபா
2024.01.01 க்கான நிலுவை	**13,015,468**	**180,244,695**	**74,215,823**	**267,475,986**
முன்னைய ஆண்டு சீர்செய்கை (குறிப்பு 12)	-	(380,727)	(27,124)	-
2024 ம் ஆண்டுக்கான மிகை / (பற்றாக்குறை)	-	-	-	-
2024.12.31க்கான நிலுவை	**13,051,468**	**179,863,968**	**74,215,823**	**147,762,890**
முன்னைய ஆண்டு சீர்செய்கை (குறிப்பு 12)	-	7,841,721	(27,124)	7,814,597
2024 ம் ஆண்டுக்கான மிகை / (பற்றாக்குறை)	-	112,952,401	14,873,829	127,826,231
2024.12.31க்கான நிலுவை	**13,051,468**	**300,658,091**	**89,062,528**	**283,403,717**

விபரம்	2024 ரூபா	2023 ரூபா
வரிவிதிப்புக்கு முன்பான மிகை / (பற்றாக்குறை)	112,952,401	92,498,166
பணம் அல்லாத இயக்கத்தின் சீர்செய்கை		
தேய்மானம்	10,568,188	10,127,840
முன்வருட சீர்செய்கை	-	-
ஊக்கத் தொகை ஒதுக்கீடு	874,287	883,953
	124,394,876	**103,509,959**
வட்டி வருமானம்	(20,649,028)	(21,760,747)
செலுத்தப்பட்ட ஊக்கத் தொகை	(564,433)	-
வேலை மூலதனம் மாற முன்னரான இயக்க மிகை/ (பற்றாக்குறை)	**103,181,415**	**81,749,212**
செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய வருமானம் அதிகரிப்பு / (குறைவு)	(19,892,948)	349,938
வணிக மற்றும் ஏனைய செலுத்துதல்களின் அதிகரிப்பு / (குறைவு)	28,517,392	8,366,701
இருப்புக்களின் அதிகரிப்பு / (குறைவு)	(1,010,784)	995,114
	110,795,075	91,460,965
செயல்பாடுகளின் போதான நிகரப் பணப் புழக்கம்	**110,795,075**	**91,460,965**
முதலீடுகளின் போதான பணப் புழக்கம்		
ஈட்டப்பட்ட சொத்துக்கள்,பொருட்கள், உபகரணங்கள்	(3,491,022)	(94,189)
சொத்துக்கள், பொருட்கள், உபகரணம் விருத்தி செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்	-	-
வட்டி வருமானம்	20,649,028	21,760,747
முதலீடுகளின் போதான நிகர பணப் புழக்கம்	17,158,006	21,666,558
வணிக செயல்பாடுகளின் போதான பணப் புழக்கம்		
நிலையான சொத்துக் கொள்வனவுக்காக திறைசேறி மூலம் வழங்கப்படும் மூலதனக் கொடுப்பனவு	-	-
வணிக செயல்பாடுகளின் நிகர பணப் புழக்கம்	-	-
பணம் மற்றும் இருப்பு தொடர்பான நிகர மாற்றம்	127,953,081	113,127,523
பணம் மற்றும் இருப்புக்கள் - வருட ஆரம்பத்தில்	235,089,571	129,762,038
பணம் மற்றும் இருப்புக்கள் - வருட இறுதியில் (குறிப்பு அ)	363,042,652	242,889,561
(குறிப்பு அ) பணம் மற்றும் இருப்புக்கள்		
வங்கியிலுள்ள பணம்	**363,042,652**	**242,889,561**

2024 டிசம்பர் 31 இறுதியான ஆண்டு
என்ய பிரகடனத்திற்கான குறிப்புகள்

குறிப்பு 1 வருமானம்

விபரம்	2024 ரூபா	2023 ரூபா
மீண்டு வரும் செலவுக்கான மானியம்	-	50,203,000
மூலதன செலவுக்கான மானியம்		
கருவூலத்தில் இருந்தான மொத்த மூலதன மானியம்	-	-
குறைந்தல் - நிலையான சொத்துக்களுக்கான மானியம்	-	-
பயிற்சித்திட்ட வருமானம்	**260,029,265**	**173,838,925**

குறிப்பு 2 ஏனைய வருமானம்

விபரம்	2024 ரூபா	2023 ரூபா
ஏல கட்டணம்	10,000	15,000
வட்டி வருமானம்	20,649,028	21,760,747
முன்னர் செய்த பாடநெறிக் கட்டணங்கள்	5,000	-
நிலையான சொத்துக்களுக்கான அரச மானியம்	-	-
மண்டப தங்குமிட கட்டணம்	241,900	25,000
பதிவுக் கட்டணம்	108,500	-
ஏனைய வருமானம்	4,137,600	383,915
மொத்தம்	**25,152,028**	**22,184,662**

குறிப்பு 3 நிர்வாக செலவுகள்

விபரம்	2024 ரூபா	2023 ரூபா
சம்பளம் மற்றும் ஊதியம்		
சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்	23,172,118	21,600,515
